3. ஆலங்குடி தாலூகா கோவில்பட்டியிலிருக்கும் சிவராவ் விற்பனைக்காக அரிசி கோதுமை இவைகளைக்கொண்டு உப்புமா செய்ததற்காக அபராதம் ரூ 10.

4. ஆலங்குடி தாலூகா குளவாய்ப்பட்டியில் ஹோட்டல் வைத்திருக்கும் நடேச முதலியார் விற்பனைக்காக அரிசி தோசை செய்ததற்கு அபராதம் ரூ 10.

5. திருமயம் தாலூகா நமனசமுத்திரம் அருக்குள நல்வா விலாஸ் காபி கிளப் முதலாளி சின்னையா செட்டியார் மற்றவர்களுடைய உணவுப் பங்கீட்டுக்கு உணவுப் பொருள்கள் வாங்கியதற்காகவும், இல்லாதவர்களுக்கு துணியும் சர்க்கரையும் வாங்கியதற்காகவும் அபராதம் ரூ 40 + 40 = 80.

6. திருமயம் தாலூகா திருமயம் சுந்தா விலாஸ் காபி கிளப் முதலாளி அண்ணாமலை சேர்வை விற்பனைக்காக அரிசி இட்லி தயாரித்ததற்காக அபராதம் ரூ 20.

7. திருமயம் தாலூகா, கோட்டையூர் வட்டம் அனந்தபுரம் கிராமத்திலிருக்கும் ராயப்ப பிள்ளை நெல் வைத்துக்கொண்டு ரேஷன் வாங்கியதற்காக அபராதம் ரூ 30.

8. குளத்தூர் தாலூகா மீனாட்சிபுரம் கருப்பையா பண்டாரம் இல்லாதவருக்கு ரேஷன் வாங்கியதற்காக அபராதம் ரூ 25.

9. புதுக்கோட்டை டவுன் நாராயணசாமி பிள்ளை பெர்மிட் இல்லாமல் நெல் ஏற்றுமதி செய்ததற்காகவும், அதிகாரிகளிடம் தவறான செய்திகளைச் சொன்னதற்காகவும் அபராதம் ரூ 25.

சமஸ்தானத்தில் கரும்பு சாகுபடியும், வெல்லம் தயாரித்தலும்

G. Swaminatha Ayyar, B. A. (Asst., S. B. H. S.)

நம் சமஸ்தானத்தில் அதிகமாக குளத்தூர் தாலூகாவில் கரும்பு சாகுபடியும், வெல்லம் ஆட்டுதலும் நடைபெறுகிறது. 1937—1938 வருஷங்களில் நான் Jaggery Demonstrator ஆக வேலை பார்த்து வரும்போது மருங்கிப்பட்டி, சின்னபாண்டுராபட்டி, பாலாண்டான்பட்டி, சேனூர், கார்த்தாமலே, கண்ணக்குடி, வெள்ளைப்பிள்ளையார்பட்டி, விசலூர், கிள்ளனூர் முதலிய இடங்களில் கரும்பு சாகுபடி நடந்து வந்தது. பெரும்பாகம் தினிக்கரும்பும், கொஞ்சம் ஆலைக்கரும்பும் சாகுபடியாயிற்று. ஆலைக் கரும்பாக நாட்டுக்கரும்பே பயிரிடப்பட்டு வந்தது. கோயமுத்தூர் இனக் கரும்பும் அதன் சிலாக்கியமும் விவசாயிகளுக்கு தெரியாமல் இருந்து வந்தது. என் பிரசாரத்தின் பேரில் பரீக்ஷார்த்தமாக ஒரு இடத்தில் கொஞ்சம் அம்மாதிரிக் கரும்பு போடப்பட்டு நல்ல பலனும் கிடைத்தது.

வெல்லம் காய்ச்சும் இடங்களில் கர்நாடக முறையில் உள்ள அடுப்புகளைத்தான் விவசாயிகள் உபயோகிக்கிறார்கள். அடுப்பு சரியானபடி இல்லாதிருக்குமானால், கரும்பு வெள்ளாண்மையின் செலவும் இதர கஷ்டங்களும் நஷ்டமாகும். இதற்காக விவசாய இலாகா புலியூரில் சித்து வாகி அடுப்பு ஒன்றைக்கட்டி கிருஷிகளுக்கு அதன் சௌகர்யத்தை நிதர்சனமாக காட்டியிருக்கிறார்கள். நம் சமஸ்தானத்தில் எல்லாக் கரும்பு விவசாயிகளிடமும் காய்ச்சும் கொப்பரைகளும் சார்பிழிவதற்கு ஆலைகளும் இல்லை. சிலரிடம் தான் இருக்கிறது. மற்றவர்கள் அதை வெல்லம் ஆட்டும் காலங்களில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளுகிறார்கள். அனேகமாக ஆலைகள் எல்லாம் நாட்டுப்புற வகையைச் சேர்ந்தவை. மாடுகள் தான் ஆலைகளில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதில் power mill-ஐப் போல அவ்வளவு அதிகமான சார் எடுக்க முடிகிறதில்லை. விவசாயிகள் தங்களுக்குள் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு அதில் கடன் வாங்கி, தங்களுக்கு விவசாயத்திற்கு வேண்டியவைகளை வாங்கிக்கொண்டு நாணயமாக கடன்களை செலுத்தி வந்தால் இந்த கைத்தொழில் இன்னும் நன்றாக செழித்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

வெல்லம் நல்ல நிறமாக இருப்பதற்கு, சார் காய்ச்சும் போது ஒவ்வொரு கொப்பரை சாருக்கும் ஒரு டீஸ்பூன் sodium hydrogen sulphite உப்பை கலக்கவேண்டும். இந்த உப்பை நான் சில விவசாயிகளுக்கு தருவித்து கொடுத்து அவர்கள் நல்ல நிறமுடைய வெல்லத்தைப் பெற்றார்கள்.

இங்கு உற்பத்தியாகும் வெல்லம் மிகக் குறைவாதலால், விவசாயிகள் தங்கள் சொந்த உபயோகத்திற்கே அதை வைத்துக்கொள்ளுகிறார்கள். விற்பனைக்கு அதிகம் வருவதில்லை.



Muvarkovil—Southern temple, Kodumbalur.



Muccukundesvara Temple, Kodumbalur.

கடலைப்புண்ணாக்கு—நல்ல எரு—மாட்டுத்தீவனம்

G. Duraiswami Ayyangar, Farm Manager.

மண்ணின், வளம், சாகுபடி செய்யப்படுகிற பயிரின் தேவை, இவைகளைத் தெரிந்து, விவசாயிகள், உரம் செய்தால், நல்ல மாசூல் பெறலாம். இது குடியானவர்களுக்கு தெரியும், தெரிந்தும் கூட, நிலங்களை போதுமான அளவு உரம் செய்கிறதில்லை. நெல் பயிர், ஏராளமாய் சாகுபடி செய்வதில், சமஸ்தான மாசூலை கவனித்தால், நடுகைக்கு 2 கலம் கூட சராசரி கண்டு முதல் இல்லை. இவ்விடத்தில், பச்சிலைத் தழைகள், கடலைப் புண்ணாக்கு உரம், ஏராளமாய் இருக்கின்றன. அவைகளை பயிர்களின் தேவைக்கு தகுந்தபடி சேர்த்து, உரமிட விவசாய குடிகளுக்கு, மனப்பான்மை வர வேண்டும். மானம் பார்த்து சாகுபடி செய்யவேண்டியிருந்தாலும், சௌகரியமான காலத்தில், போதுமான அளவு மாசூல் பெற முயற்சி வேண்டும்.

மண்வளப்பத்தை பரிசீலனை செய்து பார்த்ததில், இந்திரிய வஸ்து, தழை சத்து (N), பாஸ்பர சத்து (P_2O_5) and சாம்பாலகார சத்து (P_2O) இவை 4-ம் குறைவென்று தெரிகிறது. ஆகையால் இங்குள்ள விவசாயிகள் இந்தப் பயிர் சத்துப்பொருள்களை, அதிகரிக்கச்செய்ய ஈடுபடவேண்டும். கடலைப் புண்ணாக்கு சுலபமாயும், எங்கும் கிடைக்கூடிய உரமாகும். அதை, அமோனியம்ஸல்பேட் உரத்துடன் கலந்து உபயோகிப்பது மேன்மையான முறையாகும். அதனால் உப்பு உரத்துக்கு செலவழிக்க வேண்டிய தொகையில் பாதி மீதப்படுத்தலாம். நாட்டு உரம் வெளியூர் போகாமல் இங்கேயே உபயோகப்பட்டால், நம்முடைய மண் செழிப்படைவதுடன் நம்முடைய குடிகள் சௌகரியம் அடைய வழியுண்டு; இந்த மாதிரி கலப்பு உரத்தை இங்கு சில மில்களில் தயாரிக்கிறார்கள். அதை எல்லா விவசாயிகளும் கையாளலாம். நம்முடைய தேவைக்கு கண்டு, மீதப்படுவதை, ஏற்றுமதி செய்வதில் தோஷம் இல்லை. நம்முடைய தேவையைக் கவனிக்காமல் விற்பனை செய்வது சிலாக்கியமானதல்ல.

ஸர்க்கார் பண்ணையில், வாழைக்கு நல்ல உரமாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. நெல், கரும்பு, காய்கறி முதலியவைகளுக்கும் சிறந்ததே. பச்சிலை எருக்களுடன், இதுவும் சேர்ந்தால், நெல் பயிருக்கு பூர்ணமான உரமாகும். இதை எல்லோரும் பழக்கத்துக்கு கொண்டுவரவேண்டும்.

இன்னும் கடலைப்புண்ணாக்கு மாட்டுத்தீவனத்துக்கும் சிலாக்கியமானது. வண்டி மாடுகளுக்கும், பால் மாடுகளுக்கும், தீவனமாக்கலாம். சிலர் தான் இதை உபயோகித்து வருகிறார்கள். இதில் Protein சத்து ஜாஸ்தி இருப்பதால், பால் உற்பத்தியை அதிகப்படுத்தவும், சதை, பளபளப்பு, முதலியதை குறையாமல், அதிகப்படுத்துகிற சக்தியும் இதற்குண்டு. சிலர் கடலைப்புண்ணாக்கு தீவனம் கொடுப்பதால், மாடுகள் நல்ல நிலைமையை அடைகிறதில்லையென்கிற தப்பு அபிப்பிராயம் கொண்டிருப்பதை இதை தீவனமாகக் கொடுத்து, அனுபவ பூர்வமாக அப்படியல்ல என்ற உண்மையை தெரிந்துகொள்ளுமாறு கோருகிறேன். இதில் ஜாஸ்தி எண்ணை சத்து இல்லாமல், காரல் எடுத்துப்போவதற்கு முன் பார்த்து உபயோகிக்கவேண்டும்.

எங்கள் கல்விப் பிரயாணம்

ரெ. ராமச்சந்திரன்,

[ஆசிரியர் பயிற்சி வகுப்பு, பிரகதம்பாள் ஹைஸ்கூல், புதுக்கோட்டை.]

1948-ம் வருஷத்து ஏப்ரல் மாதத்திய நாலாம் நாள். பொழுது புலர்ந்தது; மாணவ ஆசிரியர்களின் மனதிலே மகிழ்ச்சியும் மலர்ந்தது. காலை 6-30 மணி சுமார் இருக்கும். எங்கள் தலைவர் திரு. வி. கி. ராஜகோபாலய்யரின் ஊதுகுழாய் ஒலித்தது. கூடினோம் ஒன்றாய் சகோதர ஆசிரியர்களாகிய நாங்கள் போதனாமுறை பயிற்சிக்கூட வாசலிலே. கூடி நின்ற எங்கள் மனதிலே ஓடிச்சென்ற நிகழ்ச்சிகள் பல. அணித்த தலைவன் முன்நிற்க, அவர் பின்னே நாங்கள் நின்று அலங்கரித்தோம் அணியை அழகுணர்ச்சியுடன். பணிவுடன் பாடினர் சகோதரிகள் பாரதமாதாவைப் பணிந்து. ஆவல் படைத்த எங்கள் உள்ளம் அறிந்து அவுட் ஏஜென்ஸி பஸ் அழைத்துச் சென்றது எங்களை புகைவண்டிச் சாலைக்கு.

பின் புறப்பட்டோம் புதுக்கோட்டையை விட்டு புகைவண்டியின் மூலம். ஓடிய வண்டி ஒன்பதரை மணிக்கு நாடிச்சென்ற நகர் திருச்சியை அடைந்தது. அழைத்துச் செல்லப்பட்டோம் அங்கு ஆசிரியர்களின் தலைமையின் கீழ் I. R. ஹோட்டலுக்கு. ஆங்கிடப்பட்டது அளவுச் சாப்பாடு அனைவருக்கும். அரைவயிற்றுக்கும் போதாதே என அங்கலாய்த்துக்கொண்ட அன்பர்கள் சிலர். I. R. ஹோட்டலின் அளவே

அவ்வளவுதான் என்றார் அனுபவசாலியான ஒருவர். அனைத்தையும் மறந்தோம் அடுத்த வண்டி பற்றிய நினைப்பில். ஓர் சில நிமிஷங்களில் திரண்டு நின்ற எங்கள் முன் உருண்டு வந்து நின்றது திண்டுக்கல் வண்டி ஒன்று.

ஓடி ஏறினோம் ஓரே இடத்தில் ஒருவருக்கும் இடமில்லை என்ற புகார் இல்லாமல். சென்று திரும்பிய பிரயாண நேரத்திலேயே ஒன்று கலந்து கூடி மகிழ்ந்த நேரம் அதுவே என்றால் அன்று என மறுத்துக்கூற ஒருவருமில்லை. ஆம் அப்பொழுதுதான் "சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரியொழிந்தார்ப்போல்" சந்தோஷத்துடன் சங்கீதமும் சேர்ந்துகொண்டதென்றால் கேட்கவும் வேண்டுமா? சகோதரிகள் சங்கீதம்பாடி சந்தோஷிக்க, சகோதரர்கள் இசைக் கருவிகளை இணைத்து, இசைத்து இன்புறச் செய்தனர் சிந்தையில் எழுந்த கீதமும், தந்தியில் எழுந்த நாதமும் ஒன்று கலந்ததால் விந்தையில் ஆழ்ந்தோம் வேறுவழியின்றி என்போன்ற சிலர். பாட்டுக்கள் பாட பாவையர்களும் பின் வாங்கவில்லை; நல்லதோர் நாதத்தைக் கிளப்பி நயமுடன் வாசிக்க நண்பர்களும் பின்வாங்கவில்லை. கேட்டு இன்புற எங்கள் காதுகளில் மட்டும் என்ன பூட்டா பூட்டியிருந்தது? இந்நிலையில் அவ்வண்டி அவ்வளவு சீக்கிரத்தில் திண்டுக்கல் வந்தடையும் என்று நாங்கள் நினைக்கவில்லை. காலத்தின் அளவையும் கருத்தினின்று ஒதுக்கி களிப்பில் மிகுந்திருந்த எங்கள் மனநிலையில் கருமை சூழ காலதேவன் திட்டமிடவில்லை என்பதையும் கணநேரத்திலேயே கண்டு கொண்டு விட்டோம். புகைவண்டிச்சாலையை விட்டுப் புறப்பட்ட எங்களிடம் புளகாங்கிதமாக புகன்றனர் சிலர் புரட்சி வீரர் ஜெயப்பிரகாஷ் அடைகின்றார் அந்நகரை அன்றுதான் என்று. அகமகிழ்ந்து அவ்விடம் விட்டகன்றோம். நடமாடும் மக்களுக்கு நாகரீக நகரங்கள் இடும் கட்டளைக்கிணங்க வீதியின் ஓர்புறம் ஒதுங்கி ஒருவர்பின் ஒருவராய்ச் சென்றோம்.

சென்ற எங்களை செயின்ட் மேரீஸ் ஹைஸ்கூல் வரவேற்றது முன் ஏற்பாட்டின்படி. அடுத்த சில நிமிஷங்களில் இட்டுச் சென்றனர் ஆசிரியர்கள் இடைவேளை உணவு அருந்த. சிற்றுண்டியை சிறப்புறச் செய்தது ஜிலேப்பி வகையறா. பின் புறப்பட்டோம் போதனாமுறை பயிற்சிசாலை பார்த்தறிய. கண்ட பயிற்சி சாலையின் காட்சிகள் கருத்திலிருந்த பயிற்சிக் கூடத்தை உருவகப்படுத்தியது. பார்த்து மகிழ சமயம் வாய்த்ததே பகவான் செயல் என நினைத்து நடக்க எத்தனித்தோம் நகரழகை சுற்றிக் காண. அடைந்தோம் அவ்வூர் மலைக்கோட்டையை ஐந்தரை மணி சுமாருக்கு. மாலை நேரமும் மஞ்சள் வெய்யிலும் மலையைப் பொன்னிறமாக்கிடவே மனதை மயக்கிய மறக்கமுடியாக் காட்சிகளில் அதுவும் ஒன்றாக அமைந்தது.

இதற்கிடையில் முரட்டுப் பாதையில் நடந்தறியாதப்பாதங்கள் முரண் செய்தன மலையின் உச்சியை அடைய. படுத்தனர் பாவையர்களில பலர் பாறையின்மேல் பாதங்கள் மென்மையாய் அமைந்திருந்ததாலே. பார்த்துத் திரும்பிய நாங்கள் கண்டதில் பாறையின் உச்சியிலிருந்த பாழடைந்த கோவிலும் ஒன்றாகும்.

புதுமை எல்லாம் பார்த்து முடித்த நாங்கள் புரட்சி வீரர் ஜெயப்பிரகாஷைக் காண காத்திருந்த மக்களைத்தான் கண்டோம். மக்களின் தலைவனைக் காண நாங்கள் பாக்கியம் பெறவில்லை. மறுபடியும் வருத்தத்துடன் கூறுகிறேன் "பட்டினி வயிற்றிற்குப் பால் வார்க்கும் ஏழைப் பாங்காளனை" பார்க்க இயலவில்லை என்று. கண்டு களிக்கும் வாய்ப்பை இழக்கச் செய்தது கல்விப் பிரயாணத்தின் கட்டுப்பாடே. கட்டுப்பாட்டிற்கு உட்படவேண்டியதும் கடமைகளில் ஒன்றே எனக் கருதி கடிந்து சென்றோம் செயின்ட் மேரீஸ் ஹைஸ்கூலுக்கு.

பின் உணவு முடிந்து ஊர் சுற்றிய அலுப்பு நீங்க உறக்கத்தை விரும்பியது உடல். ஆனால் திட்டமிட்டிருந்தபடி தீவட்டிக்களியாட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடும்படி நேர்ந்தது. சுவாரஸ்யம் அற்ற முறையில் சுவரொட்டி தீபம் போன்றதோர் விளக்கினை அகண்ட வெளியில் வைத்து காரிருள் போன்ற அவ்விடத்தில் களியாட்டம் நடத்தப்பட்டது. எங்களாசிரியர் அழைப்பிற்கிணங்கி அவ்வூர் போதனாமுறை பள்ளித் தலைமை ஆசிரியரும் அங்கு வந்திருந்தார். அத்தலைமை ஆசிரியரை அடுத்து தலைவாசல் வழியே தமிழ் பண்டிதர் ஒருவரும் நுழைந்தார். அவ்வளவுதான் ஓடிப்பாய்ந்தது நாய் ஒன்று அவர்மேல். இருண்ட அவ்விடத்திலிருந்து, மருண்டு அதட்டும் குரலும், விழுந்து குலைக்கும் சப்தமும் கிளம்பிடவே திரண்டிருந்த எங்கள் சிந்தனை சிதறி சிறிது நேரத்தில் விஷய மறிந்து விரட்ட வெறுண்டோடியது நாய் ஒன்று. வெறுண்டோடிய நாய் வேஷ்டியைக் கிழித்துச் செல்லவே தப்பிவந்த தமிழ்ப் பண்டிதரின் உதடுகள் முணு முணுத்தன. கண்கள் துஞ்சிட, களிப்பற்ற முறையில் களியாட்டம் முடிவடைந்தது.

இதற்கிடையில் ஓர் முக்கியமான விஷயம். உறங்கிடச்செல்ல எத்தனித்த எங்களைப்பற்றி உத்தரவு ஒன்று வந்தது உட்கார்ந்திருந்த இடத்தின் உரிமையாளரிடமிருந்து. என்ன உத்தரவு அது? ஆண்களும், பெண்களும் சேர்ந்து அவ்விடத்தில் தங்கலாகாதென்பதே அகமகிழ்ந்து வரவேற்கின்றோம்; ஆனால் ஆண்களின் மேலுள்ள அவநம்பிக்கை அவனியில் வளரும் விதமும் ஆசிரியர் தொழிலேற்கும் அன்பர்களுக்குக்கூட அவசியமானதோர்

அறிவுறுத்தல்தானா அது என்ற எண்ணமும் என்போன்ற சிலர் மனதில் தோன்றி மறைந்தது; ஏங்கி நின்ற நல்லவை பற்றிய நினைப்புடன் ஒன்று கலவாமல் உத்தரவை உதறித்தள்ளி உத்தம நெஞ்சில் ஊறிக்கிடந்த சகோதர உணர்ச்சியை உணர்த்திட உலகம் அப்பொழுது இருண்டல்லவா இருந்தது! "எல்லாம் நன்மைக்கே" என்ற வேதாந்தம் எண்ணத்தை ஆட்கொள்ள அதுவும் சரிதான் ஆண்டவன் செயலே என்று எண்ணி அயர்ந்து விட்டோம்.

அயர்ந்த கண்கள் திறந்தன அன்பர்களின் கூக்குரல்களுக்கிடையே அடுத்த தினத்திய அதிகாலையில். பின் காலைக்கடன்களை முடித்து கைகளில் மூட்டை தாங்கி காப்பி பற்றிய நினைப்பில் கால்களை எட்டிப் போட்டு நடந்து புகைவண்டிச்சாலையை அடைந்தோம். காப்பி அருந்தியதும் களை பிறந்தது முகத்தில். அடுத்த சில நிமிஷங்களில் அமர்ந்தோம் அம்பத்துரை செல்லும் வண்டியில். ஓடிய வண்டி ஓர் ஸ்டேஷனைக் கடந்ததும் அடுத்து வந்த ஸ்டேஷன் அம்பத்துரையாகக் காணப்பட்டது. இறங்கினோம் அங்கு ஏற்பாட்டின் படியே. அம்பத்துரையினின்றும் ஐந்தாறு பர்லாங் கடந்திடவே அடைந்தோம் அண்ணலின் பெயர் தாங்கிய அக் "காந்திக் கிராமம்".

காந்திக் கிராமம் பற்றி எப்படி வர்ணிப்பதென்பதே புலப்படவில்லை.

வளர்த்திக்கூறிட வார்த்தைகள் ஊறவில்லை வர்ணிப்பின் எல்லையை மீறிய உண்மையாதலால். எழுதித்தீர்த்திட எவன் பேனாவும் மையூற்றுக் கேணியல்ல. சுருங்கக் கூறினால் :—

சாந்த தேவனின் சன்னதி; காந்தியடிகளின் கனவுலகக் காட்சி சாலை; சகோதரத் தத்வத்தைக் கூட்டும் சந்தை; துர் எண்ணத்தின் எல்லை; தூய்மையின் தூண்டு கோல்; சோஷலிஸம் நிறைந்த சுவர்க்க பூமி; வாழும் வகைக்கோர் கலங்கரை விளக்கம்; உலகாளும் சிற்பிகளின் உற்பத்திச்சாலை; இன்னும் விளங்கக் கூறினால் ஆண்களும், பெண்களும், அக்காளும், அண்ணனுமே என அறிவுறுத்தும் அறிஞர் வாழ் ஆசிரமம். இப்படிப்பட்ட சிறந்த பூமி பாரத உலகில் சிறிதே ஆயினும் மறந்து வாழ்வதென்னமோ முடியாத காரியமே.

இந்நிலையில் வந்து சேர்ந்தோம் காந்திக் கிராம எல்லைக்குள். எங்கு பார்த்தாலும் தொகுதி தொகுதியாய் விடுதிகளும், விடுதிகளின் வாசலில் கோலமும், கோலத்தை யொட்டி கோதையர் பலரும் நின்றனர். அப்பொழுது தான் அறிவோம் நாங்கள் அங்கு பயிற்சி பெறுவோர் ஆண்கள் அல்லவென்று. எங்கள் மனதில், காணும் இயற்கை முதல் காந்திக் கிராம கட்ட

டம் வரை எல்லாம் வியப்பாய் இருந்தது. வியப்பை யொதுக்கி விடுதிக்குள் சென்றோம் விருந்தினராய் எங்களை வரவேற்றவருடன். அடுத்த சில விநாடிகளில் அணங்குகளில் ஒருவர் அன்புடன் அழைத்தார் ஆகாரம் சாப்பிட.

அவ்வளவு தான் ஆசிரியர் தலைமை சூழ அடைந்தோம் ஆகார விடுதியை அந்தக்ஷணமே. அடைந்த நாங்கள் ஆகாரமுண்ட அம்முதற்காட்சியே அழகிற் சிறந்த காட்சிதான், அமர்ந்த எங்கள் மனதில் அமைதி அவசியமென அறிவுறுத்தியது அவ்விடத்திய நிலைமை.

அதன் பின் ஆசிரமத் தலைவர் அறிஞர் சீனிவாசனார் அணங்குகளில் ஒருவரைக்காட்டி அவரே பிரதமர் என்று அறிவுறுத்தினார். என்னைப் பொருத்த வரையில் சென்னை சென்று திரும்பியது மனம். "பிரதமர்" என்றதும் ஓமாந்தூரார் ஞாபகம் வந்து விட்டது. "மந்திரி" என்றதும் மாகாணப் பிரதமர் ஞாபகம் வந்ததற்கு மனோதத்வ நூலாசிரியர் யாது கூறுவார்களோ யான் அறியேன். அறிந்தேன் அடுத்த சில நிமிஷங்களில் அங்கோர் "மந்திரி சபை" அவர்களுள் உள்ளதென்று அறிவுறுத்தப்பட்ட அவ்வம்மையே அதற்குத் தலைவர் என்றும், பின் அவ்வம்மை இல்லை—இல்லை பிரதம மந்திரி மணி ஒன்றை சப்தித்ததும் "சாந்தி" என்றார் சற்று நேரத்தில். அவ்வளவு தான்; கன்னியர்கள் பலர் கைகளில் கரண்டிகள் தாங்கி, பணிவுடன் பரிமாறி முடித்தனர் பத்து நிமிஷ நேரத்தில். இலையில் வெண் பொங்கலும், அதையொட்டி எங்கள் மனதில் ஆர்வம் பொங்கலும் அதிகரித்தது. பொங்கும் ஆர்வம் பொங்கலைத் தொட்டிட ஏனைக்கையில் மங்கையர்த் தலைவி மந்திரியார் மறுபடியும் "சாந்தி" என்றுரைத்து மந்திரம் சில புகன்றார். பின் சாப்பிட்டு எழுந்து சென்றோம்.

அதற்கடுத்த ஆசிரமத் தலைவர் ஆற்றினார் சொற்பொழிவு ஆதாரக் கல்வி பற்றி. ஆங்கிலக் கல்வியில் அநேக படிகள் ஏறிய அவர் அறிவை, ஆதாரக்கல்வி ஆட்கொண்டதற்குக் காரணம் அங்குள்ளவர் அதிர்ஷ்டமா? அல்லது ஆங்கிலம் கற்க.

> "செல்வு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது;
> தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
> நலமோரெட்டுணையும் கண்டிலேனிதை
> நாற்பதாயிரம் கோவிலில் கூறுவேன்"

—எனக்கூறிய

அவ்வமாகவி "பாரதியின்" அனுபவப் பாடல் தான் காரணமா என எனக்கொன்றும் புலப்படவில்லை. போய் வந்த எங்கள் அதிர்ஷ்டமே வேண்டுமானாலும் காரணமாய் இருக்கட்டும். விவாதத்திற்குரிய விஷயத்தில் வீணே தலையிட்டுக் காலத்தை வியர்த்தமாக்குவானேன்.

ஆற்றிய சொற்பொழிவில் அறிவுறுத்தினர் அவர் ஆசிரமநிலைமைப்பற்றி. அதன் மூலம் அறிந்தோம் "எவரெவர் எவ்வெப்பொழுது எந்தெந்த வேலையில் ஈடுபடுகின்றனரோ அதுவே அவர்களுக்கு அப்பொழுதைய வகுப்பு;' என்று உதாரணமாய்—.

உணவு சமைத்திடும் உத்தமிகளுக்கு வகுப்பு சமையல் அறையும்—பாடம் சமையலுமேயாகும்;

தோழிகளுடன் தோட்டவேலையில் நாட்டம் காட்டுவாரேயாயின் தோட்டமே வகுப்பும்—தொடங்கிடும் வேலையே பாடமுமாகும்;

நல்லதோர் நூலை நூற்றிடும் நங்கையர்கட்கு நூற்புச்சாலையே வகுப்பும் நூற்றிடும் நூலே பாடமுமாகும்;

பாய் முடைந்திடும் பாவையர்க்கு பின்னல் கூடமே வகுப்பும் பின்னிடும் பாயே —

இப்படியாக இவை படித்தறிந்த அறிவு மட்டுமல்ல; பார்த்தறிந்த அனுபவமும் கூட,

பாவையர் பயிற்சி பற்றி பார்த்தறிந்த நாங்கள் பாலர் பலர் படித்திடும் பாடசாலை ஒன்றினைக் கண்டோம்.

"பாலனன்றி—பாடம் முக்கியமல்ல; பாலனின் மனதை ஒட்டியே பாடம்"; எனப் பகர்பவரும், படித்தவரும் பலர் உண்டு. சிந்தனையின் சிகரத்தில் ஏறுபவர் அநேகர் செயலின் ஆழத்தில் இறங்குபவர் வெகுசிலரே. அப்படியல்ல அப்பாடசாலை. பயிலும் மாணவர்கட்கு பரிபூரண சுதந்திரம் வினவிடும் கேள்விகளோ பாலனின் அறிவின் உயரத்தை அளந்து கூறும் கருவிகள் எனலாம். வகுப்புத் தொடங்கு முன் வணங்கித் தொழுவர் கடவுளை பின் கருத்தினில் கொள்வர் காந்தியடிகளின் செயலை. வகுப்பினிலும் ஒரு "மந்திரி சபை" உண்டு. சுகாதார மந்திரியாம் ஒருவன் சகோதரர்களின் சுத்தம் பற்றி கவனிக்க; உணவு மந்திரியாம் ஒருவன் சோறு படைத்திட; மந்திரிகள் தலைவனும் ஒருவன் ஒழுங்கை நிலை நிறுத்த. மந்திரிகளின் கடமை மாணவர்களை சுத்தத்தின் சொரூபமாகவும் ஒழுங்கின் உதாரண கர்த்தர்களாகவும் உருவகப் படுத்தியுள்ளதென்றால் உண்மையன்றி வேறல்ல. மந்திரித் தலைவன் மாணவர்கள் பற்றிய முன் தினத்திய நற்செய்கை எவை எனவினவ! உண்மையைக் கூறுகின்றனர் ஒளித்திடாமல். கூறிய செயல்கள், சரியவை என்றும் சீர்திருத்தப்பட வேண்டியவை என்றும் மதிப்பிட வேண்டியதும் மாணவர்கள் பொறுப்பேயாகும். அதன்

பின் தொடங்குவர். தொழிலை ஒட்டிய பாடம் இன்றைய இச்சிறுவர் இவ்விதப் பயிற்சி பெறின், நாளைய உலகில் நானிலம் புகழ் நாடாளும் பொழுது நிர்வாகத்தில் ஜனநாயகம் ஓங்கி சர்வாதிகாரம் சரிந்து விழும் என்பதை எவர் மறுக்க முடியும்! வளர்க அவர்கள் பயிற்சி! ஜனநாயகம் ஓங்கிடவே.

சிறக்க, பாடசாலை ஆசிரியையின் பண்பும் பயிற்றுவிக்கும் ஆற்றலுமே பாலனின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்பதைப் பார்த்தறிந்தோம். B. A. பட்டம் பெற்று பின், பிள்ளைகளின் மனமறிந்து நடக்க, அடையார் மான்டிசோரி முறையில் அவர் அடைந்த பயிற்சியை அநுபவ முறையில் காணச் செய்தார் அவ்வம்மையார்.

இவ்விதம் காணவந்த காந்திக் கிராம நிகழ்ச்சிகளைக் கண்டறிந்தோம் காலை 8-மணி முதல் மாலை 6-மணி வரை. அவ்வமயம் காலதேவன் சூரியனை விழுங்கி, இருளை ஏவி உலகை கருமை சூழ்ந்திடச் செய்ய நினைக்கையில், துன்பத்தை துளைத்தும் இன்பம் சிறிது வெளிப்படுவது போல; கருமையைப் பிளந்து கழுத்தை நீட்டினான் சந்திரன். பால் போல் நிலவு பகலெனக் காய்ந்தது காந்திக் கிராமத்தில் சந்திர நில வொளியில் சாப்பிட அழைத்தனர் சகோதரிகள். இட்டனர் இலையில் புளியோதரையை போதுமான அளவிற்கு மேல். ஆனந்தத்தில் மிகுந்த ஆடவர் ஒரு புறமும், சந்தோஷத்தில் சம பங்கு கொண்ட சகோதரிகள் மற்றொரு புறமும் அமைந்திருந்த அக்காட்சி அமரகவியின் பாடலைத்தான் சிந்தனைக்கு இழுத்து வந்தது.

“சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டிடுவோம்” என்ற பாட்டு.

என் மனது என்னையறியாது பாடிற்று.

“காந்திக் கிராம நிலவினிலே-தமிழ்
காரிகையர் பலருடனே
சாந்தியுடன் நாம் சாப்பிட்டிடுவோம்
சமைத்திட்ட புளியோதரையை” என்று.

பாடிய வாறே அள்ளிப்போட்டேன் ஓர் கவளம்.

அதன் பின் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்றோம். கூடினோம் ஒன்றாய். கோடிச் சந்திரன் கூடிப்பிரகாசித்தாலும் ஈடில்லை எனக்கு நிகர் என்பது போல் எரிந்திட்ட எலக்டிரிக் லைட்டின் கீழ். பிரார்த்தனை ஆரம்

பித்தனுயித்தனை விளக்குடனேயே. அவனியில் ஆராய்ச்சியாளரின் அறிவை அளந்து காட்டும் கருவியாய் அமைந்திருந்த அந் நாகரீக விளக்கு அணைக்கப் பட்டது அடுத்த சில நிமிஷங்களில். காரணத்துடன்தான் அணைக்கப் பட்டது அவ்விளக்கு. நாதனை வணங்கிட நாள் தோறும் சென்று திரும்பும் நந்தா • விளக்கையே அன்றொரு நாள் அணைத்து விட்டான் ஓர் பாவி. அன்னவர் காட்டிய அன்பு வழியை பின்பற்றி ஆண்டவனை வணங்கும் போது அணைந்த நந்தா விளக்கினை மனதில் கொண்டு நாகரீக விளக்காம் இதை அணைத்து நற்தீபஸ்தம்பம் ஏற்றி நாதனை வணங்கினால் நாம் அதைப் போற்ற வேண்டியதுதானே? கடவுளை வணங்கினர்; பின் காலக்காற்றில் கலந்த காந்திஜியின் கடைசி மூச்சு சாந்தியடைய சங்கீதம் பாடி சற்குரு நாதனைத் துதித்தனர் சகோதரிகள் பலர்.

கூட்டம் முடிந்தது. இரவு 8-30 மணி சுமார் பயிற்சி பெறும் மாணவிகள் "ஏழை படும் பாடு" என்ற கதையின் மூற் பகுதியை நடத்தினர். 'கதையின் கருத்து—"வறுமையே ஒருவனைத் திருடனாக்குகிறது. சட்டம் அவனுக்கு சவுக்கடி கொடுத்து சிறைக்குள் தள்ள வெளிவரும் அவன் வேறு வழியின்றி அச்சம் நீங்கி அதையே திரும்பத் தன் தொழிலாகக் கொள்கிறான். அன்பு ஒன்றே அவனை சீர்திருத்த வழி" என்பதாகும். நயம்பட நடித்தனர் நங்கையர்கள்.

அதன்பின் எங்கள் சகோதரிகளில் ஒருவர் பாத நட்டியம் ஆடி பார்ப்பவரை பிரமிக்கச் செய்தார்.

அதன்பின் நாங்கள் சிலர்கூடி நல்லதோர் "சமதர்மம்" அவசியமான வலிவுறுத்தும் நாடகம் ஒன்றை "தொழிலாளியும்-முதலாளியும்" என்னும் தலைப்புதாங்கி நடித்தோம். அனைத்தும் ஆனந்தமாக முடிந்திடவே அயர்ந் தோம் அன்றைய தினம்.

ஏப்ரல் மாதத்திய 6-ம் நாள். காலை 6-மணி சுமார், அதிகாலையில் எழுந்து ஆகாரம் உண்டு அனைவரிடமும் விடைபெற்று ஐந்தாறு பர்லாங் நடக்க அடைந்தோம் அம்பத்துரை ஸ்டேஷனை. அங்கிருந்து புறப்பட்டோம் பசுமலையைநாடி, அடைந்தோம் பசுமலையை அடுத்த இரண்டு மணி நேரத்தில் ஆங்கு ஆசிரியர் இட்டுச்சென்றனர் அண்ணாமலையார் விடுதிக்கு.

பின் பயிற்சிசாலை ஒன்றைப் பார்த்திடப் புறப்பட்டோம். கண்ட பயிற்சிசாலை கருத்திலிருந்து அகலா காட்சியே ஆயினும், போதிய வசதி இருப்பின் போதனையிற் சிறந்த நம் பயிற்சிக் கூடமும் சீரிய முறையில் சிறப்பு பெற்றேதிரும் என என்மனதில் தன்மான உணர்ச்சி தலை தூக்கிக் கூறியது. அதன்பின் கண்டோம் கைத்தொழில் சாலை ஒன்றை; கண்ட, கைத்தொழில்களை எல்லாம் கற்றறியக் கருத்து தூண்டியதே ஆயினும் காரியசாத்தியமற்றதை நினைத்துக் கனவுலகில் கருத்தைச் செலுத்தாதே எனக் கண்டித்தது என் மனம்.

இந்நிலையில் சாப்பாடு முடித்து, பசுமலை விட்டு பகுதி பகுதியாய் பார்த்திடப் புறப்பட்டோம் மதுரைமா நகரை. நானும் நண்பர்கள் சிலரும் நகரையடைந்தோம் 4-மணி சுமாருக்கு. நகரின் அழகை நவில்வது அவசியமோ? நீதி தவறியதின் நிமித்தம் உயிர் நீத்த நெடுஞ்செழியன் ஆண்ட தலை நகரம்; கற்புடைக் கன்னியாம் கண்ணகியின் கண்கள் கலங்கியதால் கருகி வெந்து புரட்சியால் புனிதமான புண்ணிய நகரம். இத்தகைய பிரசித்தி பெற்ற நகரின் நாயகியாம் மீனாக்ஷியின் ஆலயத்தை அடைந்தோம் ஐந்துமணி சுமாருக்கு. ஆலயத்தை அழகுறச் செய்யும் அச்சிற்ப வேலையில் சிந்தனையைச் செலுத்தி அண்ணாந்து பார்ப்பவர்கள் ஐந்து நிமிஷமாயினும் அரை மணியேயாயினும், அடுத்தவர் கூப்பிடும்வரை அவ்விடம் விட்டகல்வதில்லையென்றால் அதிகம் கூறவேண்டுமோ அதன் சிறப்புபற்றி. பின்சென்றோம் தெப்பக்குளம் என்ற இடத்திற்கு. இயற்கையன்னையின் இருப்பிடமே அது எனக்கூறலாம்.

அதையும் பார்த்து அகமகிழ்ந்து அரண்மனையை நோக்கிப் புறப்பட்டோம். திருமலை நாயக்கர் மஹாலுக்குத்தான். இங்குதான் கலை பேசுகிறது; காட்சி கண்களை கவர்கிறது. கட்டிப்பிடித்தேன் கம்பங்களை "கண்டு செல்லும் இற்றையத்தமிழா! இத்தகைய கலையில் சக்தி உண்டோ உன் சமகாலத்தவருக்குச் சொல்" என்றது கலை. தலை குனிந்தேன். பின் கலையும் கண்களும் ஒன்று கலந்தன. கலந்த கண்களில் கண்ணீர் பெருகியது. உணர்ச்சி மிகுந்த ஓர் சில பாடல்களை நினைத்தேன், மீண்டும் கண்கள் கலங்கின.

கலை வளர்க்க கொடிபிடித்து கடல் கடந்து ஆண்ட தமிழா !!
அச்சமின்றி போர்தொடுத்து அகிலம்தன்னை ஆட்டிய ஆண்மை மிக்கவர்
வழி வழி வந்த தமிழா !!

கச்சைகட்டிக் கொங்கை மாதர் சண்டை செய்ததை மறந்த தமிழா !!
கலைகள் பொங்க கப்பல் செய்து கடல் கடந்ததை மறந்த தமிழா !!
கம்பனென்ற கவி பிறந்து கலை வளர்த்த நாட்டிலே வம்பளர்ந்து தமிழழிந்து
வாட்டமுற்றிருக்கும் தமிழா !!

உன் கலை எங்கே? உன் மொழி எங்கே?

என்று மேலும் மேலும் என் மனச்சாக்ஷி சவுக்கு கொண்டடிக்க ஆரம்பித்தது பொறுக்கமுடியவில்லை. போதும், போதும் என்று கதறினேன். கலை அழகில் கருத்தழிந்து தவிக்கும் என் சிந்தனையை சிதைந்து சிநேகிதர் ஒருவர் “வந்ததை மறந்தாயோ வாயில் வந்ததைக் கூறுகின்றாயே” என்றார் சஞ்சலப்பட்ட என் மனம் சத்தியம் செய்துகொண்டது, சகபாடிகளையே சான்றாகக் கொண்டு.

(1) தாயின் மேல் ஆணை; தந்தையின்மேல் ஆணை;
என் தமிழகத்தின்மேல் ஆணை,
தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே
தோழா நான் உரைக்கின்றேன்.

(2) நாயினும் கீழாய் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் காணச் சகியேன்
ஓய்தலின்றி அவர்தம் கலை ஓங்கிடவே

உழைத்திட நான் தவறேன். (வ. உ. சி.) என பிரதிஞ்ஞை செய்தபடி வந்து சேர்ந்தோம் பசுமலைக்கு. பின் இரவு “Love Divine” என்னும் நாடகம் கண்டுகளித்து கண்ணயர்ந்தோம்.

ஏப்ரல் 7-ம் தேதி காலை எங்கள் பிரயாண இடம்புறப்பட்ட இடமான புதுக்கோட்டையை நோக்கியே. அன்பர்கள் மனதில் ஆர்வம் குறைந்து, அசதி அதிகம் நிறைந்து அடைந்தோம், புதுக்கோட்டையை பதினொரு மணி சுமாருக்கு.

வந்த எங்களை வரவேற்றார் உயர் திரு. சாமிநாத ராவ் அவர்கள். ஆசி கூறி அனுப்பிவைத்த அவர், அன்புடன் வரவேற்கவும் வந்த அன்னவரின் அப்பண்பிற்கும் வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

நிற்க, கல்வியின் மேன்மையையே கருத்திற்கொண்டு காலமெல்லாம் கல்வியின் பொருட்டே உழைத்து ஆசிரியர்களாம் எங்களுக்கு அவ்வப் பொழுது அன்புடன் ஆசி கூறி வந்த கல்வி இலாகா தலைவர் அவர்கட்கும், அன்னவரின் சொல்லுக்குச் செவிசாய்த்து அன்புடன் பொருள் தந்துதவிய அரசாங்கத்தாருக்கும், எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை-600 008
143441

Sri Brihadamba State Press, Pudukkottai. 810—15-5-48.

வந்தேமாதரம்! ஜெய் ஹிந்த்!!

RAJA SOAP WORKS PUDUKKOTTAI

Raja Soap Works

தந்தி :- "ராஜா சோப்". தபால் பெட்டி நெ. 36.

நாகரீக உலகத்தில் மங்கையும், மகனும்

விரும்புவது தூய ஆடை

(காரணம்)

"சுத்தம் சோறுபோடும்
சுத்தமே சுகம் தரும்"

அச்சுத்தமே

கடவுளுக்கு அடுத்தபடி மதிக்கவேண்டிய விஷயமும் ஆகும்.

இவைகளைப் பூர்த்திசெய்வது

"ராஜா சோப் ஒர்க்ஸின்"

"கங்கை பார் சோப்புகள்"

818 கீழ ராஜவீதி, புதுக்கோட்டை.

Published by the Publicity Officer, Pudukkottai State. Printed at the Sri Brihadamba State Press, Pudukkottai. All communications should be addressed to the Publicity Officer, Pudukkottai.